வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

நாள்: 03.10.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

மாணவர்கள் தாங்கள் நடந்து கொள்ளும் விதத்தில், வலுவான தார்மீக நெறிகளை பின்பற்ற வேண்டும் என, குடியரசுத் தலைவர் திருமதி திரெளபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கு நவராத்திரி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை மாலை புதுடெல்லியில், கௌடில்யா பொருளாதார மாநாட்டில் உரையாற்றுகிறார்.

புதுச்சேரியில், 5 நாள் இந்திய திரைப்பட விழாவை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நாளை தொடக்கி வைக்கிறார்.

-----------------------------

*முர்மு-ராஜஸ்தான்* 1 (17)

மாணவர்கள் தாங்கள் நடந்து கொள்ளும் விதத்திலும், பணிக் கலாச்சாரத்திலும், வலுவான தார்மீக நெறிகளை பின்பற்ற வேண்டும் என, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். இன்று ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில், மோகன்லால் சுகாடியா பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், இளைஞர்கள் தங்களின் இயல்பான குணங்களை மாற்றக் கூடிய பணி எதிலும் ஈடுபடக்

கூடாது என்றார். கல்வியை விட, ஒழுக்கமே சிறந்தது என்று அண்ணல் அம்பேத்கர் கூறி இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

21ஆம் நூற்றாண்டில், எல்லாத் துறைகளிலும் விரைவான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்ற நிலையில், மாணவர்கள் தங்களின் கற்றல் உணர்வை விடாமல் பராமரித்து, கல்வியின் பயன்களை முழுமையாக அடைதல் அவசியம் என்று, குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார். தனிநபர் லட்சியங்களுக்கும், சமூகத்தின் தேவைகளுக்கும் இடையே சமநிலையை பராமரித்தல் முக்கியம் என்றும் அவர் கூறினார்.

2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில், இளம் தலைமுறையினரின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்று, குடியரசுத் தலைவர் கூறினார்.

*முர்மு-ராஜஸ்தான் 2 (10)*

தற்போது எல்லாத் துறைகளிலும் பெண்கள் முன்னேறி வருவது மிகுந்த மகிழ்ச்சிக்கு உரியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராஜஸ்தான் ஆளுநர் திரு. ஹரிபாவ் பாக்டே, பஞ்சாப் ஆளுநர் திரு. குலாப் சந்த் கட்டாரியா, ராஜஸ்தான் துணை முதலமைச்சர் திர. பிரேம் சந்த் பைர்வா உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

ராஜஸ்தானுக்கு 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாளை அபு மலையில், பிரம்ம குமாரிகள் சங்கத்தின் உலக உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

ராஜஸ்தான் மாநில அரசால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள ஆதி கவுரவ் சம்மான் விழாவிலும் அவர் கலந்து கொள்கிறார்.

---------------------------

மோடி-நவராத்திரி (8)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கு நவராத்திரி வாழ்த்து தெரிவித்துள்ளார். சக்தி வந்தனைக்கு அர்ப்பணிக்கப் பட்டுள்ள புனிதமான நவராத்திரி பண்டிகை, அனைவருக்கும் மங்களகரமாக திகழட்டும் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். நவராத்திரி பண்டிகையின் முதல் நாளில், ஷைலபுத்ரி மாதாவை இருகரம் கூப்பி நமஸ்கரித்துக் கொள்ளவதாகவும். அன்னையின் கருணை, நாட்டு மக்கள் அனைவரையும் ஆசீர்வதிக்கட்டும் என்பதே தமது பிரார்த்தனை என்றும், பிரதமர் கூறியுள்ளார்.

---------------------------

*மன் கீ பாத் – பத்தாண்டு (14)*

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் புகழ்பெற்ற மன் கீ பாத் வானொலி நிகழ்ச்சி இன்றுடன் 10 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. 2014ஆம் ஆண்டு இதே நாளில்தான், பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆகாஷ்வாணி மூலம் தமது எண்ணங்களை, மாதந்தோறும் மக்களுடன் பகிர்ந்து கொள்ள தொடங்கினார். இந்த பத்தாண்டுகளில், முக்கியமான பல்வேறு சமூக, கலாச்சார, மற்றும் சுற்றுச் சூழல் பிரச்சனைகள் குறித்து, மன் கீ பாத் நிகழ்ச்சியில் பிரதமர் பேசி இருப்பதும், பிரதமருக்கும், மக்களுக்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடல் மேடையாக இந்நிகழ்ச்சி மேம்பட்டு இருப்பதும் குறிப்பிடத்தக்கது. சமுதாயத்தில் கூட்டுணர்வு

அடிப்படையில் யார், எந்த நற்செயல் புரிந்தாலும், மன் கீ பாத் நிகழ்ச்சி மூலம் அங்கீகாரம் வழங்கப் படுவதாகவும், ஒவ்வொரு மாதமும், பல்வேறு சாதனைகள், மற்றும், ஆளுமைகளை அடையாளம் காட்டும் கதம்ப மாலையாகவே மன் கீ பாத் நிகழ்ச்சி அமைந்து இருப்பதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த மாதம் மன் கீ பாத் நிகழ்ச்சியில் கூறினார்.

----------------------------

*மோடி-பொருளாதாரம் (14)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை மாலை புதுடெல்லியில், கௌடில்யா பொருளாதார மாநாட்டில் உரையாற்றுகிறார். இந்த 3ஆவது கௌடில்யா பொருளாதார மாநாட்டின் அமர்வுகள், நாளை முதல், வரும் 6ஆம் தேதி வரை நடைபெறுகின்றன. இவ்வாண்டு இம்மாநாட்டில், உலக நாடுகளின் வர்த்தகச் சூழலில் காணப்படும் புவி-பொருளாதாரத் துண்டாடலும் - வளர்ச்சி மீதான அதன் தாக்கங்களும் என்பது குறித்தும், பசுமைத் தொழில்நுட்பங்களுக்கு மாறும் திட்டங்களுக்கான நிதி வசதி உள்ளிட்ட பிரச்சனைகள் குறித்தும் முக்கியமாக விவாதிக்கப்படும். இந்தியப் பொருளாதாரம், மற்றும், தெற்குலக நாடுகளின் பொருளாதாரச் சூழல் குறித்து, இந்திய, மற்றும், சர்வதேச அறிஞர்களும், கொள்கை வகுப்பாளர்களும் விவாதங்களில் ஈடுபட உள்ளனர். கௌடில்யா பொருளாதார மாநாடு, மத்திய நிதி அமைச்சகத்துடன் இணைந்து, பொருளாதார வளர்ச்சிக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப் படுகிறது.

----------------------------

*திரைப்பட விழா - டெல்லி* (12)

சுற்றுச் சூழல், மற்றும், வனவிலங்கு பாதுகாப்பு பற்றிய வதாவரண் என்னும் சர்வதேச திரைப்பட விழா, புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. வாழ்க்கைக்கான சதுப்பு நிலங்கள் என்னும் கருப்பொருள் அடிப்படையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இந்த 3 நாள் திரைப்பட விழாவில், சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. சுற்றுச் சூழல், மற்றும், பொருளாதார ரீதியில் பல்வேறு நன்மைகளை வழங்கக் கூடிய சதுப்பு நிலங்கள், இந்தியாவிற்கு மிக முக்கியமானவை என்று, சுற்றுச் சூழல் மற்றும், வனத்துறை அமைச்சகத்தின் வனத்துறை தலைமை இயக்குநர் திரு. ஜிதேந்திர குமார், தொடக்க விழாவில் பேசுகையில் கூறினார். நாட்டின் 6 சதவிகித மக்கள், தங்களின் வாழ்வாரத்திற்கு, சதுப்பு நிலங்களையே நம்பி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

-----------------------------

*திரைப்பட விழா - புதுச்சேரி* (11)

புதுச்சேரியில், செய்தி விளம்பரத் துறையும், அலையான்ஸ் பிரான்ஸே மற்றும் நவதர்ஷன் திரைப்பட கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 5 நாள் இந்திய திரைப்பட விழா, நாளை முதல், 8ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நாளை மாலை, அலையான்ஸ் பிரான்ஸே கலையரங்கில், இவ்விழாவை தொடக்கி வைத்து, 2022ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படத்திற்கான சங்கரதாஸ் சுவாமிகள் விருதை, குரங்கு பெடல் திரைப்பட இயக்குநர் கமலக் கண்ணனுக்கு வழங்கி சிறப்பிக்கிறார். நாளை, குரங்கு பெடல்

திரைப்படமும், விழாவின் எஞ்சிய நாட்களில், தலா ஒரு பிராந்திய மொழித் திரைப்படமும், அலையான்ஸ் பிரான்சே கலையரங்கில், மாலை 6 மணிக்கு, இலவசமாக திரையிடப்படும்.

-----------------------------

*காரைக்கால் (11)*

காரைக்கால் பாலிடெக்னிக் கல்லூரியில், ஹெச்ஐவி, மற்றும், பால்வினை நோய் தொற்று குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, மற்றும், புகையிலை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. மாணவர்கள் புகையிலை பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள், சமூகக் குற்றங்கள், மற்றும், புகையிலை தடுப்பு சட்டப்படியான தண்டனைகள் குறித்து சிறப்பு விருந்தினர் டாக்டர் நந்தினி, கல்லூரியின் முதலாமாண்டு மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். வினாடி-வினா போட்டிகள் நடத்தப்பட்டன. போதை பொருள் பயன்பாட்டை தவிர்ப்பது குறித்து மாணவர்களுக்கு உறுதி மொழி செய்து வைக்கப் பட்டது. புதுச்சேரி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், மற்றும், வரிச்சகுடி ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைந்து, இந்நிகழச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

-----------------------------

*இந்தியா-இலங்கை* (18)

பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கு, விண்வெளித் தொழில்நுட்பம் கற்றுக் கொடுப்பதற்கான முதலாவது முன் முயற்சியாக, இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. ஸ்பேஸ் கிட்ஸ் இண்டியா அமைப்பிற்கும், யாழ்பாணத்தின்

Northern Uni கல்விக் கழகத்திற்கும் இடையிலான இந்த ஒப்பந்தம், அகமதாபாத்தில் உள்ள InSpace விண்வெளித் தொழில்நுட்ப இயக்குநர் டாக்டர் பிரசன்ன குமார் முன்னிலையில் சென்னையில் இன்று கையெழுத்தாயிற்று. இலங்கையின் யாழ்பாணம் பகுதியைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள், இந்திய மாணவர்களுடன் இணைந்து, செயற்கைக் கோள் ஒன்றை வடிவமைத்து, தயாரித்து, விண்ணில் ஏவும் வகையில் இத்திட்டம் அமைந்துள்ளது. கல்வி, தொழில்நுட்பம், மற்றும், விண்வெளி ஆராய்ச்சியை, மக்களை ஒன்றுபடுத்துவதற்கான கருவியாக பயன்படுத்த வேண்டும் என்பதே, இந்தியா-இலங்கை ஆகிய இரு நாடுகளின் பொதுவான பார்வை என்று, ஸ்பேஸ் கிட்ஸ் இண்டியா அமைப்பின் நிறுவனர் டாக்டர் ஸ்ரீமதி கேசன், நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். இலங்கை மாணவர்கள், அதிநவீன தொழில்நுட்பம் கற்பதில் இது மிகப் பெரிய பாய்ச்சலாக அமையும் என்று, இலங்கை தகவல் தொழில்நுட்பக் கழகத்தின் தலைவர் திரு. இண்டி பத்மநாதன் கூறினார்.

----------------------------

*ஹரியானா* (12)

ஹரியானாவில், வரும் 5ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது. கடைசி நாளான இன்று, பல்வேறு அரசியல் கட்சிகளின் முக்கிய தலைவர்கள், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர். மூத்த பிஜேபி தலைவரும், அசாம் முதலமைச்சருமான திரு. ஹிமந்த பிஸ்வா ஷர்மா, பல்வல் தொகுதியில் பிஜேபி வேட்பாளருக்கு

ஆதரவாக ஜன் ஆசீர்வாத் பேரணியில் உரையாற்றினார். பல்லப்கார் பகுதியில் மூத்த பிஜேபி தலைவரும், உத்தராகண்ட் முதலமைச்சருமான திரு. புஷ்கர் சிங் தாமி, தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். காஸ்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தீபீந்தர் ஹூடா, கல்கா பகுதியிலும், ஜனநாயக் ஜனதா கட்சியின் மூத்த தலைவர் திருமதி நயினா சவ்தாலா, பஞ்ச்குலா பகுதியிலும், தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

-----------------------------

*வானிலை (20)*

லட்சத் தீவு, மற்றும், அதனை ஒட்டிய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், ஈரோடு, திருப்பூர், சேலம், திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. நாளைய தினம், தஞ்சை-நாகை, திருவாரூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 9ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மன்னார் வளைகுடா, குமரிக்கடல் மற்றும் தென் தமிழகத்தின் கடலோர பகுதிகளிலும், மத்திய கிழக்கு-வடகிழக்கு வங்கக் கடல் பகுதிகளிலும், மணிக்கு 55 கிலோ மீட்டர்

வரையிலான வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருப்பத்தூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் கெலவரப்பள்ளி அணை உள்ளிட்ட இடங்களில் 9 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரி பாகூரில் 1 செ.மீ மழை பெய்துள்ளது.

-----------------------------

*அமித் ஷா* (13)

மகாத்மா காந்திக்கு பின்னர், தூய்மைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, தூய்மையை மக்கள் இயக்கமாவே மாற்றி இருப்பது, பிரதமர் திரு. நரேந்திர மோடிதான் என்று, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். இன்று அகமதாபாத்தில், 470 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்தும், அடிக்கல் நாட்டியும் தொடக்கி வைத்து அவர் உரையாற்றினார். காந்தி நகர் நாடாளுமன்றத் தொகுதிக்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் அமைச்சர் தொடக்கி வைத்தார். சோலா புறநகர் பகுதியில் உள்ள ஜி-மெர்ஸ் மருத்துவமனையில், புதிதாக கட்டப் பட்டுள்ள தொலை நிலை மறுவாழ்வு மையம் உள்ளிட்ட வசதிகள் இதில் அடங்கும். உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று மாலை அகமதாபாத்தில், குஜராத் மாநில சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, துடிப்பான குஜராத் நவராத்திரி விழாவையும் தொடக்கி வைக்கிறார்.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மாணவர்கள் தாங்கள் நடந்து கொள்ளும் விதத்தில், வலுவான தார்மீக நெறிகளை பின்பற்ற வேண்டும் என, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கு நவராத்திரி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை மாலை புதுடெல்லியில், கௌடில்யா பொருளாதார மாநாட்டில் உரையாற்றுகிறார்.

புதுச்சேரியில், 5 நாள் இந்திய திரைப்பட விழாவை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நாளை தொடக்கி வைக்கிறார்.

----------------------------